රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Services, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: (94) 011- 2694560 Telephone
ෆැක්ස් / தொலைநகல்: (94) 011- 2692254 Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: dgcs@pubad.gov.lk E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: www.pubad.gov.lk Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/04
ඔබේ අංකය / Your No:
දිනය / திகதி / Date: 2020.10.22

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள் முன்னைய சேவையில் 2 ஆம் வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியெய்துள்ளதன் அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் 2 ஆம் வினைத்திறன் காண் பரீட்சையிலிருந்து விடுவித்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பான எனது இலக்கம் CS/DOS/05/03/01 மற்றும் 2018.02.16 ஆந் திகதிய கடிதத்திற்கு மேலதிகமானது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்கள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட திகதிக்கு ( அதாவது 2011.08.01 ஆந் திகதிக்கு) முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்குவிதியின் கீழ் 2 ஆம் வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியெய்துள்ளதன் படி, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணத்தின் 17.1 ஆம் பிரிவிற்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் 2 ஆம் வினைத்திறன் காண் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என நீர் அவ்வலுவலர்களுக்கு அறிப்படுத்தினால் போதுமானது என தயவுடன் அறியத்தருகின்றேன்.

அவ்வாறே அவ் அலுவலரை சேவையில் உறுதிப்படுத்தல், தரமுயர்த்தல் அல்லது வினைத்திறன் காண் பரீட்சை தொடர்பில் வினவும் போது அக் கடிதத்தின் பிரதியையும் வினைத்திறன் காண் பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரத்தின் பிரதியையும் எனக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேலும் அறியத்தருகின்றேன்.

எவ்வாறாயினும், எவரேனும் ஒரு அலுவலர் முன்னைய சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டள்ள 2 ஆம் வினைத்திறன் காண் பரீட்சை 2011.08.01 ஆந் திகதியின் பின்னர் சித்தியெய்துள்ள சந்தர்ப்பத்தில், 2 ஆம் வினைத்திறன் காண் பரீட்சையிலிருந்து விடுவிப்புச் செய்வதற்கு தாங்கள் முற்படக் கூடாது எனவும், அவ்வாறான அலுவலர்களுக்கு வினைத்திறன் காண் பரீட்சைக்கான சலுகை வழங்குவது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டு அவசியப்படும் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்